குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம்
Kurinji Muthamizh Sangam

குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் & கல்விக் கூடம்
Kurinji Muthamizh Sangam & Academy

# நிகழினி இதழ்

# NIGAZHINI MAGAZINE

பதிப்பாசிரியர் : திருமதி. சந்திரா ஸ்ரீதர்

இணை பதிப்பாசிரியர்:
திருமதி. திவ்யா சங்கரசுப்பிரமணியன்

பதிப்பு : 8/2025/1



குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் & கல்விக் கூடம்
Kurinji Muthamizh Sangam & Academy

## குறிஞ்சி உறுதி மொழி

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேல்
தொன்மையான நம் தமிழ் மொழி,
தமிழ் கலாச்சாரம் மற்றும் தமிழ்ச் சமுதாயத்தில்
நானும் ஒரு அங்கமாக இருப்பதில்
பெருமைக் கொள்கிறேன்!
தமிழில் பேசவும், எழுதவும், படிக்கவும்
நான் என்றும் முயற்சி செய்வேன் என்று
உறுதி எடுக்கிறேன்!
தமிழை வாசிப்போம்! நேசிப்போம்! சுவாசிப்போம்!
வணக்கம்!

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| 1 | ஆசிரியர் பக்கம் | 2 |
| 2 | இணை ஆசிரியர் பக்கம் | 3 |
| 3 | திருக்குறள் | 4 |
| 4 | கண்ணதாசன் காவிய வரிகள் | 5 |
| 5 | நன்றி மறவா நற்பண்பு --- தமிழர் பண்பாடு | 6 |
| 6 | தமிழ் விடுகதைகள் | 12 |
| 7 | படித்ததில் பிடித்தது - வீண் பழி போடாதே! | 13 |
| 8 | சமையலறை டிப்ஸ் | 14 |
| 9 | வாழ்க்கை | 14 |
| 10 | வெற்றி காண வா! | 15 |
| 11 | பொங்கல் விழா | 16 |
| 12 | தமிழர் திருநாள் | 17 |
| 13 | தெரிந்து கொள்வோம் - கல்லணை | 18 |
| 14 | தேசியக் கொடியின் இறுதி வடிவம் | 20 |
| 15 | வண்ணம் தீட்டி படத்துடன் வார்த்தைகளை கோடிட்டு இணை | 21 |
| 16 | கண்டுபிடி கண்டுபிடி | 22 |
| 17 | பொங்கல் ஓவியம் | 22 |
| 18 | தமிழ் பழமொழிகள் | 22 |
| 19 | எங்கள் கிராமப் பொங்கல் | 23 |
| 20 | கைவினைப் பொருள்கள் வைத்து பொங்கல் அலங்காரம் | 27 |

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| 21 | இறகைப்போலே பறக்கிறேனே!!! | 28 |
| 22 | ஓவியம் | 29 |
| 23 | குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கத்தின் இனிய இரண்டாவது பொங்கல் திருவிழா | 30 |
| 24 | பொங்கல் விழாவின் தலைமை உரை | 31 |
| 25 | குறிஞ்சி பொங்கல் விழாவின் --- தன்னார்வலர்கள் | 31 |
| 26 | பொங்கல் நிகழ்ச்சி புகைப்படம் | 34 |
| 27 | மகாகவி பாரதி கவிதை விளக்கம் போட்டி பாரதி சொல்வது என்ன? | 35 |
| 28 | தேடிச் சோறு தினம் தின்று | 36 |
| 29 | பாரதி சொல்வது என்ன? | 37 |
| 30 | 'தேடிச் சோறுநிதந் தின்று'-பாரதியார் | 38 |
| 31 | குறிஞ்சியின், கோலாகலப் பொங்கல் கொண்டாட்ட விழாவில் கோலப்போட்டி இல்லாமலா?<br>கோலப்போட்டியில் கலந்து பரிசு பெற்ற போட்டியாளர்கள் | 41 |
| 32 | பழமொழி | 43 |

குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் & கல்விக் கூடம்
Kurinji Muthamizh Sangam & Academy

**Editor : Mrs.Chandra Srithar**
**ஆசிரியர் :திருமதி. சந்திரா ஸ்ரீதர்**

**Co-editor : Mrs. Dhivya Sankarasubramanian**
**இணை ஆசிரியர்:**
**திருமதி. திவ்யா சங்கரசுப்பிரமணியன்**

ஆசிரியர் இலாகா விளம்பரம் முகவரி
5252 E 130th circle
Thornton
Colorado 80241,USA.
kurinjimuthamizhsangam@gmail.com

**குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம்**, **"நிகழினி இதழ்"** தமிழ் சமூகத்திற்காக டிஜிட்டல் வடிவில் வெளியிடுவதில் பெருமை அடைகிறது.

நிகழினி என்றால் மங்கா அறிவொளி பொருந்தியவள், பிரகாசமாக சொலிப்பவள் என்று பொருள்.

இந்த இதழ் தொன்மையான நம் தமிழ்மொழியை நேசிக்கும் மக்களின் சுயப்படைப்புகள் மற்றும் நிர்வகிக்கப்பட்ட படைப்புகளை உங்கள் வாசிப்புக்காகக் கொண்டு வரும்.

இந்த இதழில் நிர்வகிக்கப்பட்டப் படைப்புகள் அனைத்தும் வாசகர்கள் நல்லத் தமிழ் படிக்கும் நோக்கத்தில் இடம் பெறுகின்றன.

பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அதை எழுதியவர்களின் சொந்தக் கருத்துகளே!

எந்தவொரு நகல் உரிமைச் சிக்கலுக்கும் உண்மைத்தன்மைக்கும் குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் பொறுப்பல்ல.

# ஆசிரியர் பக்கம்

நிகழினி நிரந்தரம்!

தடுமாறி விழும்போது
தன்னம்பிக்கையும்
தலைவனாக இருக்கும்போது
தனித்துவத்தையும்
தடுமாறி விழும்போது
தன்னிலை மாறாமையும் மட்டுமே,
ஒருவனை உயர்த்தும் வெற்றித்தூண் ஆகும்.
இருண்ட வாழ்க்கைக்கு
வெளிச்சம் தேடினால்
இருண்டு போகாமல் இருக்கும்
வாழ்க்கைக்கு வழி கிடைக்காது.
வெற்றி ஒருபோதும் நிரந்தரமில்லை
என நினைத்தால்,
தோல்வி நம்மை ஒன்றும் செய்யாது!
நிமிர்ந்து நிற்பது பலமும் அல்ல?
குனிந்து நிற்பது பலவீனமும் அல்ல?
நிமிர்ந்து நிற்கும் வேலை விட,
வளைந்து கொடுக்கும் வில் அம்பு எட்டி பாயும்!

**கடந்த ஒரு வருடத்தில் வெளியிட்ட ஒவ்வொரு நிகழினி பதிப்பிலும் பெரியவர்களின் படைப்பில் ஒரு படைப்பும் சிறியவர்கள் படைப்பில் ஒரு படைப்பும் தேர்ந்தெடுக்கப்பட்டு குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் மற்றும் கல்விக்கூடத்தின் ஆண்டுவிழாவில் பரிசுகள் வழங்கப்படும்.**



**உங்கள் பங்களிப்பை**
**வரவேற்கிறோம்.**
**மகிழ்ச்சியாக வாசியுங்கள்!**

இங்ஙனம்
**திருமதி.சந்திரா ஸ்ரீதர்**
ஆசிரியர்

# இணை ஆசிரியர் பக்கம்

## பொங்கல்

பழையன கழிதலும் புதியன புகுதலுமாய் போகியுடன் தொடங்கி, அதிகாலையில் பனையோலை நெருப்பில் புதுப்பானைப் பொங்கலிட்டு, சூரியனுக்குப் படைத்து நன்றி சொல்லி, காகத்துக்குப் படைத்து, சர்க்கரைப் பொங்கல், சாம்பார், அவியல், பொரியல் என அத்தனை வகை சாப்பாட்டுடன் தித்திக்கும் செங்கரும்பும் கடித்துண்டு, மறுநாள் உழவுத்தொழிலுக்கு உதவும் மாடுகளுக்குப் பொங்கல் வைத்து நன்றி சொல்லி, தை மாதம் மூன்றாம் நாள் உழவுக்கு வளம் சேர்க்கும் அந்த நீர் சக்திக்கு நன்றி சொல்ல, உழவர் திருநாளாகிய அந்நாளில் நீர்நிலைகளுக்கு மக்கள் செல்வர்.

தொழிலாகவும், உணவுக்கு இன்றியமையாதத் தேவையாகவும் இருந்த வேளாண் தொழிலுக்கு உதவிய சூரியன், நீர் முதலான இயற்கைக்கும் கால்நடைக்கும் நன்றி செலுத்தும் விதமாக நம் முன்னோர்கள் கொண்டாடியப் பெருமைக்குரிய திருநாளே இந்த பொங்கல் திருநாள். எனக்கு மிகவும் பிடித்தப் பண்டிகை!

தமிழ்ப் பண்டிகைத் திருநாளில் நம் தமிழ் மாத நிகழினி இதழில் இணை ஆசிரியராக சேர்ந்துப் பணியாற்றுவதில் பெரும் மகிழ்ச்சி கொள்கிறேன்.



இங்ஙனம்
இணை ஆசிரியர்
**திவ்யா சங்கரசுப்பிரமணியன்**

# திருக்குறள்



**பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா**
**பிற்பகல் தாமே வரும்.**

பொருள் : அடுத்தவருக்கு துன்பத்தை காலையில் செய்தால்
தனக்கு துன்பம் மாலையில் தானாகவே வரும்.

**Meaning :** If, ere the noontide, you to others evil do,
Before the eventide will evil visit you.

**திருக்குறள் எண் 319 - அறத்துப்பால்**

**அதிகாரம் - 32 - இன்னாசெய்யாமை**



இரவின் கண்ணீர் பனித்துளி என்பார்
முகிலின் கண்ணீர் மழையெனச் சொல்வார்
இயற்கை அழுதால் உலகம் செழிக்கும்
மனிதன் அழுதால் இயற்கை சிரிக்கும்

என இயற்கையாய் நடக்கும் செயல்களை வைத்து, எவ்வளவு உயரியக் கருத்தையும் வழி நடத்தலையும் புரிந்திக்கிறார் என நினைக்க வியப்பாய் உள்ளது.

# நன்றி மறவா நற்பண்பு ---- தமிழர் பண்பாடு

**திருமதி - ஞானப்பூங்கோதை சுப்பிரமணியன்**



தமிழர் பண்பாடு என்ற வரிசையில் இந்தப் பதிவில் நாம் சிந்திக்க இருப்பது மற்றுமொரு சிறந்த பண்பாடாகிய செய்ந்நன்றி யறிதல் என்ற நன்றி மறவாமை பற்றித் தான். பிறர் நமக்குச் செய்த உதவியை அல்லது நன்மையை நினைவில் நிறுத்திப் போற்றுவதே செய்ந்நன்றி மறவாமை யாகும். பலருக்கும் தாம் பிறருக்குச் செய்த நன்மையே நினைவில் நிற்கும். பிறர் தமக்குச் செய்த உதவி மறந்துவிடும்.

செய்ந்நன்றி என்பது கைம்மாறு கருதாதது . அதனால் அந்த நன்மையைப் பெற்றுக் கொண்டவர்தாம் அதை நினைந்து போற்றவேண்டும் என்பார் தமிழண்ணல். அதாவது செய்யப்பட்ட உதவி நினைக்கப்பட வேண்டும். செய்யப்பட்ட நன்றி என்பதே செய்ந்நன்றி எனச் சுருங்கியது. நமக்குத் தேவை ஏற்பட்டபோது உதவி செய்தவர்களை மறக்காமல் அவர்களுக்குப் பெரிதும் நன்றி உடையவர்களாக இருக்கும் ஒரு மனப்பாங்கு செய்ந்நன்றி அறிதல் ஆகும்.

திருக்குறள் ஒருவர் செய்யும் உதவியைப் பின்வருமாறு வகைப்படுத்துகிறது .

1 . தானாக முன்வந்து செய்யும்
உதவிக்கு ஈடான செயலை
இந்த மண்ணுலகம்
விண்ணுலகம் இரண்டிலும்
காண முடியாது.

2 . பயனை எதிர்பாராமல்
ஒருவர் செய்த உதவி கடலை
விடப் பெரியது.

3 .உற்ற நேரத்தில் செய்த உதவி
சிறியதாக இருந்தாலும் அது
உலகத்தை விடப் பெருமை
யுடையது .

செய்யப்பட்ட உதவி சிறியதாயினும் பெரியதாயினும்  உதவியைப் பெற்றுக் கொண்டவரால் நினைக்கப்பட வேண்டும். நன்றி உணர்வு உள்ளவர்கள் நன்மையின் அளவை எண்ணாமல்,  செய்யப்பட்ட உதவிக்காகவே அதைப் பெரிதாகப் போற்றுவர்.

துன்பக் காலத்தில் நமக்கு உதவி செய்தவர்களை எப்பொழுதும் மறக்காமல் அவர்களோடு தொடர்பில் இருக்க வேண்டும . பிறர் செய்த நன்மையை மறவாதிருப்பது போலவே ,
நன்மை யல்லாத வற்றையும் மறந்திருக்கப் பழக வேண்டும். எவ்வகையான நன்மையைச் சிதைத்தவர்க்கும் மீட்சி உண்டு.  ஆனால் செய்த உதவிக்கான நன்றியுணர்வைக் கொன்றவர்க்கு அதிலிருந்து மீள வழியே யில்லை.

இவையெல்லாம் நன்றி மறவாப் பண்பை வலியுறுத்தும் திருக்குறள் கருத்துகள். நன்றி கொன்ற குணத்தைக் குற்றங்களின் உச்சமாகக் காட்டுகிறது திருக்குறள் .
இதிகாசங்களில் செஞ்சோற்றுக் கடன்.

கம்பராமாயணத்தில் , இராவணனின் இளைய சகோதரனாகிய விபீடணன் தன் மற்றொரு சகோதரனாகிய கும்பகருணனிடம்,  இராமனைச் சேர்ந்து பழி பாவங்களிலிருந்து மீளுமாறு வேண்டுகிறான்.

அதற்கு மறுமொழியாகக் கும்பகருணன், "ஆலோசனை யற்ற தலைவன் ஒரு தீய செயல் செய்ய நினைத்தால் அவனை அச்செயல் செய்யாமல் தடுத்துத் திருத்துவது நல்லது. அப்படித் திருத்த முடியவில்லை யென்றால் அவனுடைய பகைவரை யடைந்து பெறக்கூடிய பயன் ஏதுமில்லை.

போர்த்தொழிலுக்கு உரியவராகிப் போரிட்டு நமக்கு அன்னம் இட்டவர்க்கு முன் இறத்தலே அவர் இட்ட சோற்றை உண்டவற்கு உரிய செயல் ஆகும் " என்று விபீடணனிடம் கூறுகிறான்.

நீர்க்கோல வாழ்வை நச்சி
நெடிதுநாள் வளர்த்துப்
பின்னைப்
போர்க்கோலம் செய்து
விட்டார்க்கு உயிர்கொடாது
அங்குப் போகேன்;
தார்க்கோல மேனிமைந்த!
என்துயர் தவிர்த்தி ஆகின்
கார்க்கோல மேனியானைக்
கூடிதி, கடிதின் ஏகி.
கருத்திலா இறைவன் தீமை
கருதினால் அதனைக்
காத்துத்
திருத்தலாம் ஆகின் அன்றோ
திருத்தலாம்? தீராது
ஆயின்
பொருத்து உறுபொருள்
உண்டாமோ?
பொருதொழிற்கு உரியர்
ஆகி,
ஒருத்தரின் முன்னம் சாதல்,
உண்டவற்கு
உரியது அம்மா..

( கம்ப ராமாயணம்— கும்பகர்ணன் வதை படலம் 155, 157 )

மகாபாரதத்தில் கர்ணனின் செஞ்சோற்றுக்கடன் :

குந்தியின் மகனாகப் பிறந்து, தேரோட்டியின் மகனாக வளர்க்கப்பட்டு , வில்வித்தை கற்றுத் தேர்ந்த கர்ணன் அர்ச்சுனனோடு போட்டியொன்றில் மோத வரும்போது துரோணாச்சாரி யாரால் இழிகுலத்தான் என்று அவமானப்படுத்தப்பட்டான். அச்சமயம் துரியோதனன் அவனை அங்க தேசத்து அரசனாக்கித் தன்னுடைய நண்பனாக்கிக் கொண்டான்.

இதற்கு நன்றிக்கடனாகக் கர்ணன், தான் பாண்டவர்களின் மூத்த சகோதரன் என்று அறிந்த பின்பும் பாண்டவர்களுக்கு எதிராகத் துரியோதனனுக் காகப் போரிட்டு உயிர் துறந்தான். இவ்வாறு இதிகாச கதாபாத்திரங்கள் செய்ந்நன்றி மறவா நற்பண்பினை நமக்குக் கற்பிக்கின்றன.

நன்றியறிதலுக்கு மிகச் சிறந்த இலக்கணமாக விளங்கியவர் கம்பர். இராம காவியம் பாடிய கம்பரை அப்போது ஆதரித்து வந்தவர் திருவெண்ணெய் நல்லூரில் வாழ்ந்து வந்த சடையப்ப வள்ளல் ஆவார். அதனால் அவருக்குத் தம் நன்றியைத் தெரிவிக்கும் வகையில் தாம் இயற்றிய இராமாயணக் காப்பியத்தில் ஆயிரம் பாடலுக்கு ஒரு பாடலில் சடையப்ப வள்ளலின் புகழைப் பாடுகின்றார். அவற்றில் ஒன்றிரண்டு பாடல்களை மட்டும் இங்குக் காண்போம்.

விண்ணவர் போயபின்றை
விரிந்தபூ மழையினாலே
தண்ணெனும் கானம் நீங்கித்
தாங்கரும் தவத்தின்
மிக்கோன்
மண்ணவர் வறுமை
நோய்க்கு மருந்தன
சடையன்
வெண்ணெய் அண்ணல்தன்
சொல்லே அன்ன
படைக்கலம் அருளினானே .
( பால காண்டம் — வேள்விப் படலம் 419 )

பால காண்டத்தில் விசுவாமித்திர முனிவர் தாம் நடத்தும் வேள்வியைக் காக்க இராம இலக்குவரைக் கானகத்திற்கு அழைத்துச் செல்கிறார். அப்போது விசுவாமித்திரர் இராமனுக்குப் படைக்கலம் தந்த நிகழ்வைக் கம்பர் சடையப்ப வள்ளலின் கொடைச் சிறப்போடு ஒப்பிட்டுக் கூறியுள்ளார்.

இம்மண்ணில் வறுமையில் வாடுவோரின் வறுமை நோயைத் தீர்க்கும் அருமருந்தாக விளங்கும் சடையப்ப வள்ளலின் அன்பு மொழிக்கு நிகரானது விசுவாமித்திரர் இராமனுக்குத் தந்த அஸ்திரம் என்பது இப்பாடலின் கருத்து .

யுத்த காண்டத்தில், இராவணனிடமிருந்து சீதையை மீட்க வேண்டி இலங்கை செல்வதற்குச் சேதுவின் மேல் பாலம் அமைக்கச் சுக்ரீவன் வானரத் தச்சனாகிய நளனை வரவழைத்தான். விபீடணனின் ஆலோசனையோடு பாலம் அமைக்கத் தொடங்கினர். வானரக் கூட்டம் மலைகளைப் பிளந்து நளனிடம் தந்தன .

திருவெண்ணெய் நல்லூரில் வாழ்ந்து வந்த சடையப்பரிடம் " நீயே தஞ்சம் " என்று வந்தவர்களுடைய துன்பத்தைச் சடையப்பர் தாங்குவது போல நளன் வானரக்கூட்டம் பிளந்து கொண்டுவந்த மலைகளைத் தாங்கிப் பிடித்தான் .

மஞ்சினில் திகழ்தரு
மலையை மாக்குரங்கு
எஞ்சுறக் கடிது எடுத்து எறிய
வேநளன்
விஞ்சையில் தாங்கினன்
சடையன் வெண்ணெயில்
தஞ்சம் என்றோர்களைத்
தாங்கும் தன்மைபோல்.

( யுத்த காண்டம் — சேதுபந்தனப் படலம் 6811 )
பிறர் துன்பத்தைத் தன் துன்பம் போல் கருதும் சடையப்பரின் ஈர நெஞ்சத்தை இப்பாடல் வெளிப்படுத்துகிறது. சங்க இலக்கியங்களில் செய்ந்நன்றி யறிதல்.

சங்க இலக்கியங்களும் நன்றியறிதலை வலியுறுத்தத் தவறவில்லை.
நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென
அறம்பா டிற்றே. (புறநானூறு 34)

நிலம் கீழ்மேலதாக ஆவதாக இருப்பினும் ஒருவன் செய்த நன்றியை மறத்தல் ஆகாது . அவ்வாறு நன்றி மறந்தவனுக்கு உய்யும் வழியில்லை என்று அறநூல் கூறுவதாகப் புறநானூறு கூறுகிறது .

உண்டவரை நீண்ட நாட்கள் வாழவைக்கும், கிடைத்தற்கரிய அருநெல்லிக்கனியைத் தான் உண்ணாமல், தமிழால் உலகை வாழ வைக்கும் தமிழ்ப் புலவர் ஔவையாருக்குக் கொடுத்து உண்ணச் செய்தான், அதியமான் நெடுமான் அஞ்சி என்ற சங்க காலத்தில் வாழ்ந்த ஒரு மன்னன்.

அக்கனியை ஔவையாருக்குக் கொடுக்கும்போது அதனைத் தான் அரிதின் முயன்று பெற்றமை பற்றியோ, அன்றி அதனை உண்பதால் அடையும் பேற்றினையோ ஔவையாருக்கு உரைக்காது, அளித்துப் புசிக்குமாறு வேண்டினான். ஔவையார் அதனை உண்ட பிறகே அதன் அருமை பெருமைகளை அவருக்கு உணர்த்தினான்.

அவனது இத்தன்னலமற்ற செயல் கண்டு மகிழ்ந்த ஔவையார் அவனைப் பின்வருமாறு வாழ்த்தித் தம் நன்றியை வெளிப்படுத்தினார்.

போர்அடு திருவில்
பொலந்தார் அஞ்சி !
பால்புரை பிறைநுதல்
பொலிந்த சென்னி
நீலமணி மிடற்று ஒருவன்
போல
மன்னுக பெரும நீயே !
தொல்நிலப்
பெருமலை விடர்அகத்து
அருமிசை கொண்ட
சிறியிலை நெல்லித்
தீங்கனி குறியாது
ஆதல்நின் அகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்கு
ஈத்தனையே.
என்பது தான் அப்பாடல்.

" சாதற்குக் காரணமான நஞ்சினை உண்டும் , சிவபெருமான் சாகாது இறைமைப் பண்பு காட்டி நின்று அழியாது இருத்தல் போல, நீயும் அழியாது நிலைத்திருப்பாய் “ என்று அவர் வாழ்த்தியதனால் அதியமானின் பூதவுடல் நீங்கினாலும் புகழுடல் இன்றும் நிலைத்திருக்கின்றது.

**வ . உ . சிதம்பரனாரின் நன்றி மறவாமை:**

வழக்கறிஞரக இருந்த வ. உ. சிதம்பரனார் பிரிட்டிஷ் அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தியதால், அவருடைய வழக்கறிஞர் உரிமத்தை ஆங்கிலேய அரசு இரத்து செய்து வைத்திருந்தது . ஆனால் நீதிபதி வாலஸ் ஆங்கிலேயரானபோதும் வ. உ. சி. மீது இரக்கம் கொண்டு, வ. உ. சி. க்காக வாதாடி அவர் இழந்திருந்த வக்கீல் உரிமத்தை மீட்டுக் கொடுத்தார்.

நீதிபதி வாலஸ் தமக்குச் செய்த உதவிக்கு நன்றிக் கடனாகத் தாம் என்ன செய்ய முடியும் எனச் சிந்தித்தார். அச்சமயம் தமக்குப் பிறந்த மகனுக்கு அந்த நீதிபதியின் பெயரைச் சூட்டித் தம் மகனை வாலேசவரன் என்று அழைத்தார்.

செக்கிழுத்த செம்மல் வ. உ. சி., செய்ந்நன்றி மறவாத அந்த நல்ல பண்பினாலும் சரித்திரப் புகழ் பெற்று விளங்குகிறார்.
நீதி நூல்களில் செய்ந்நன்றி யறிதல்:

குழந்தைகள் வளரும்போதே அற வுணர்வுகளோடு வளர வேண்டும் என்பதற்காக அவர்களுடைய தொடக்கக் கல்வியில் ஆத்திசூடி , உலக நீதி , கொன்றை வேந்தன் போன்ற அற நூல்கள் கற்பிக்கப் படுகின்றன.

" நன்றி மறவேல் " என்று ஆத்திசூடியும் (21),
" செய்த நன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம் " என்று
உலகநீதி யும் ,
" நன்றிப் பயன்தூக்கா நாணிலி எச்சம் இழந்து வாழ்வார் " என்று திரிகடுகமும் (62)
,
" நன்றிப் பயன்தூக்கி வாழ்தல் நனியினிது "என்று இனியவை நாற்பதும் (30)
நன்றியறிதல் பற்றி வலியுறுத்துகின்றன.
"பிறர்செய்த நன்றியை நன்றாகக் கொளல் " என்றும்,
" நன்றிசாம் நன்றறி யாதார் முன்னர் " என்றும்,
" நன்மை செய்தாரைவிடப் பிறர்செய்த நன்றியை மறவாதவர் மிக மேலானவர் "
என்றும் நான்மணிக் கடிகை குறிப்பிடுகிறது.

" நன்றி ஒருவர்க்குச்
செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல்
எனவேண்டா – நின்று
தளரா வளர்தெங்கு
தாள்உண்ட நீரைத்
தலையாலே தான்தருத
லால் " என்று மூதுரை (1)

தென்னைமரத்தின் நன்றியறிதலைக் குறிப்பிடுவதன் மூலம் செய்ந்நன்றி யறிதலை வலியுறுத்துகிறது .

பிறவிகளிலேயே மிக உன்னதமான மானிடப் பிறவியையும், இப்பிறவியில் பலப்பல நல்ல விடயங்களையும் நமக்கு அருளிய இறைவனுக்கு நாம் என்றென்றும் நன்றியறிதலுடன் வாழ்வோம் .

## தமிழ் விடுகதைகள்

1.பச்சைப் பொட்டிக்குள் வெள்ளை முத்துகள்?

2. வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ. அது என்ன?

3. காலையில் வந்த விருந்தாளியை மாலையில் காணவில்லை.
அது என்ன?

4. காலையில் வந்த விருந்தாளியை மாலையில் காணவில்லை.
அது என்ன?

5. பூவோடு பிறந்து; நாவோடு கலந்து விருந்தாவான் மருந்தாவான்.
அவன் யார்?

# படித்ததில் பிடித்தது
# வீண் பழி போடாதே!

## திருமதி. ரேவதி சுகுமாறன்

ஒரு அரசன் ஒரு புலவருக்கு விருந்தளித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது வானில் கழுகு ஒன்று பாம்பைத் தன் கால்களில் பற்றிக் கொண்டு அவ்வழியேப் பறந்துச் சென்றது. பாம்பின் வாயிலிருந்து ஒரு துளி விஷம் அரசன் வைத்திருந்த உணவுப் பாத்திரத்தில் விழுந்து விட்டது. அதையறியாமல் அரசன் அந்த உணவை அந்தப் புலவருக்கு அளிக்க, அதை உண்ட மறு கணமே அவர் இறந்து போனார். அரசன் துடித்துப் போனான்! புலவரின் மரணம் அவனை வேதனையில் ஆழ்த்தியது.

கர்மாக்களுக்கான வினைப் பயன்களை நிர்ணயிக்கும் சித்திரகுப்தருக்கு, இக் கர்மவினைப் பயனை யாருக்குக் கொடுப்பது? என்று குழப்பமாகிவிட்டது. கழுகிற்கா? பாம்பிற்கா? அல்லது அரசனுக்கா?

கழுகு, பாம்பைத் தூக்கிக் கொண்டுச் சென்றது அதன் தவறில்லை. விஷம் இறந்துபோன பாம்பின் வாயிலிருந்து வழிந்தது அது பாம்பின் குற்றமும் இல்லை. அரசனுக்கோ, உணவில் பாம்பின் விஷம் கலந்தது தெரியாது. அது அவனறியாமல் நடந்தச் செயல். எனவே யாருக்கு இந்தப் பாபம் போய் சேரும்! என்று சித்ரகுப்தருக்கே முடிவெடுக்க முடியவில்லை. இதைப்பற்றி யமதர்மரிடமே கேட்போம் என்று தன் குழப்பத்தைக் கூறினார்! சித்ரகுப்தர். சித்திரகுப்தர் கூறியதைக் கேட்ட யமதர்மன், சற்று நேரச் சிந்தனைக்குப் பிறகு, இதற்கான விடை விரைவில் கிடைக்கும்! அதுவரைப் பொறுமையாக இரு! என்றார்.

ஒரு சில நாட்கள் கழித்து, மற்றொருப் புலவர் அரசனின் உதவியை நாடி வந்தார். அவர் அரண்மனைக்கு வழி தெரியாமல், சாலையோரம் வியாபாரம் செய்து கொண்டிருந்தப் பெண்மணியிடம் வழி கேட்டார். அப்பெண்மணியும் அவருக்கு சரியானப் பாதையைக் கூறிவிட்டு, இந்த அரசன், இரக்கமற்ற கொடியவன்! புலவர்களைக் கொல்பவன்! அவனிடம் சற்று எச்சரிக்கையாக இருங்கள்! என்றாள்.

இவ்வாறு அவள் கூறி முடித்ததும், அடுத்த நொடி சித்திரகுப்தருக்கு தெளிவு பிறந்து விட்டது. *புலவரைக் கொன்ற கர்மாவின் வினைப் பயன் முழுவதும் இந்தப் பெண்மணிக்கே சேரும்* என்று முடிவெடுத்தார். எவ்வாறு......?

மற்றவர்கள் மீது வீண் பழி சுமத்தும் பொழுது அந்தப் பாவம் முழுவதும், பழி சுமத்துபவருக்கே வந்து சேரும். "உண்மையை அறியாமல் அபாண்டமாகப் பிறர் மீது பழி சுமத்துவோரும், தெரிந்தே வீண் பழியைப் பிறர் மீது சுமத்துவோரும் அந்தந்த கர்மவினைகளின் பயன் முழுவதும் வந்து சேரும்! அதை அவர்கள் அனுபவித்தே தீர வேண்டும்".

எந்தவொரு விஷயத்தையும் திரித்து, பொய் சொல்லி, மற்றவர்கள் மீது பழி சுமத்தும் ஒவ்வொருவரும், அதற்கான வினைபயனை அனுபவித்தே தீர வேண்டும்! என்பது நியதி.

## சமையலறை டிப்ஸ்

### திருமதி. ரேவதி சுகுமாறன்

1. வெள்ளி ஆபரணங்களுடன் சிறிதுக் கற்பூரத்தை போட்டு வைத்தால் வெள்ளி ஆபரங்கள் கறுப்பாவதை தடுக்கலாம்.

2. துணிகளில் எண்ணெய் கரையோ, கிரீஸ் தாரோ பட்டு விட்டால் அவற்றைத் துவைக்கும் போது சில சொட்டுக்கள் நீலகிரித் தைலம் வீட்டுக் கழுவினால் கறைகள் போய்விடும்.

3. வெங்காயம் நறுக்குவதற்கு முன் கத்தியை சூடு செய்து விட்டால் கண்களில் எரிச்சல் இருக்காது.

4. பால் எவ்வளவு நேரம் வைத்து காய்ச்சினாலும் கீழே வழியாமல் இருப்பதற்கு பாத்திரத்தின் மேல் வடிக்கட்டியை வைக்கவும் (வடிகட்டி Stainless steel ஆக இருக்க வேண்டும்). இப்படி செய்தால் பால் பொங்கினாலும் கீழே வழியாது.

## வாழ்க்கை

### திருமதி - வனதுர்கா வெங்கட்



தேடும் பொருள்
தொலைதூரம் இல்லை
சிக்கிவிடாதே என் கைகளுக்குள்
உன்னை தேடுவதில்
என் இருப்பு உள்ளது.

**நோக்கம்:**

அடுத்து அடுத்து என்று நாம் ஒரு குறிக்கோளை நோக்கி நகர்வதே வாழ்க்கை. அப்படி நகரவில்லை என்றால் தேங்கி நின்றுவிடுவோம். அல்லது ஒரு கட்டத்தில் அதன் வென்றுவிட்டேன் என நினைத்தாலும் தேங்கி விடுவோம். நாம் எங்கும் பெருமிதமும் கொள்ளக் கூடாது, சோர்வும் கொள்ளக் கூடாது.இது அவர் அவர் பார்வையில் மாறுபடும்.

# வெற்றி காண வா!

**திருமதி. ப்ரீத்தி வெ ராமன்**



நீரோட்டத்தில் வேகமாய் மீன் பிடித்த நீயே,
தோல்வி வந்தாலும் முன்னேறு துணிவுடன் நீயே!

தேன் கூட்டிலிருந்து
தேனை எடுத்த நீயே,
இனிய வார்த்தைகளால் இனிமையை பரப்பு நீயே!


கற்பனை பல செய்து வெற்றி கண்ட நீயே,
நாளைய கற்பனையில்
இன்றைய இன்பத்தை தொலைத்திடாதே நீயே!

காலத்தை வீணாக்காமல் தேடிய நீயே,
மீண்டும் வெற்றி காண் முயன்றிடு நீயே!

**நோக்கம்:**
தமிழ்  வலிமையின் அழகை அதை, ஆழமாக ரசிக்கும் தெரிகிறது. உண்மையில் தமிழ் வார்த்தைகள் தேன்தான். நாவின் நுனியில் சுவை நடனமாடுகிறது.
கவிதைகள் ஒரு கானம் தான், காதில் கேட்க கவலைகள் மறக்கிறது.

# பொங்கல் விழா

**செல்வன் - அன்வித் ராஜேஷ்**







## நோக்கம்:

ஆடி மாதத்தில் தேடி விதைத்தப் பயிர்களின் விளைச்சலை அறுவடை செய்து பயன் அடையும் பருவமே தை மாதம் ஆகும். அந்த அறுவடையில் கிடைத்த நெல்லின் புத்தரிசியைச் சருக்கரை, பால், நெய் சேர்த்துப் புதுப் பானையிலிட்டுப் புத்தடுப்பில் கொதிக்க வைத்துப் பொங்கல் சோறாக்கி சூரியனுக்கும் மாட்டுக்கும் படைத்து உண்டு மகிழும் விழாவே பொங்கல் விழாவாகும்.

# தமிழர் திருநாள்

**செல்வன் - ஆத்விக் ராஜேஷ்**



தமிழர் திருநாள்
பொங்கல்

பொங்கல் என்பது தமிழர்களின் முக்கியமான அறுவடை திருவிழா.

இது நான்கு நாட்கள் கொண்டுள்ளது போகி, பொங்கல் மாட்டுப்பொங்கல் காணும் பொங்கல்.

முக்கிய உணவு பொங்கல்.

சூரியனை வழிபடுவதாகும்.

விவசாயிகளின் வெற்றியை கொண்டாடும் நாள்.

வீடுகளில் கோலங்களுடன் அலங்காரம் செய்யப்படுகிறது. நெய் "பொங்கல்" என்பது முக்கியமான சைவ உணவாம்.

மாடுகளுடன் விளையாடி மகிழ்ச்சி அடைகின்றனர்.

பொங்கல் தமிழர்களின் பாரம்பரியத்தின் முக்கிய பகுதியாக உள்ளது.

By. ஆத்விக் ராஜேஷ்

## நோக்கம்:

தமிழகத்தில் ஒரு போகம், இருபோகம், முப்போகம் என அறுவடை செய்யும் நிலப்பகுதிகள் உள்ளன, ஒரு மாவட்டத்திற்குள்ளேயே இந்த நிலப்பகுதிகள் மாறுபடும்.

அதனால் பொதுவாக தை மாத அறுவடையை அறுவடைத் திருநாளாகக் கொண்டாடியுள்ளனர். அதுபோல, ஆடிபட்டத்தில் விதைக்கப்படும் காய்கறிகள், கிழங்குகள், தானியங்கள், மலர்கள் உள்ளிட்ட அனைத்துப் பயிர்களும் அறுவடையாகும் மாதம் தை மாதம்தான்.

எனவே தை மாதம் பிறக்கும் நாளை இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் நாளாக தமிழர்கள் வணங்கி வழிபட்டனர்.

# தெரிந்து கொள்வோம்


## கல்லணை

### திருமதி - பிரியா ராஜேஷ்



தமிழருடைய வரலாறு பல ஆயிரம் வருடங்களைத் தாண்டிய ஒரு பழமையான வரலாறாகும்!!! அவற்றில் ஒன்றான கரிகால சோழனின் வாழ்க்கை வரலாற்றையும் அவர் கட்டியக் கல்லணைப் பற்றி நாம் இந்த தொகுப்பில் பார்க்கலாம். கரிகால சோழன் சங்கக் காலத்தைச் சேர்ந்த ஒரு சோழ மன்னன் ஆவார்.

### கரிகால சோழனின் முக்கிய வாழ்க்கைச் சுவடுகள்:



முடி சூட்டியபோது - வயது 5
வெண்ணிப் போர் வெற்றி - வயது 15
வாகைப்போர் வெற்றி - வயது 16
இமயமலை படை எடுப்பு - வயது 17-20
இலங்கை படை எடுப்பு - வயது 21
காவிரி கரை, கல்லணை (காலம் கிமு 12) கட்டி முடித்தபோது வயது - 53
அதன்பின் தஞ்சை சென்று, தன் வேளிர் குலத்தவரோடு 83 வயது வரை வாழ்ந்தார்.

### கரிகால சோழன் கட்டிய கல்லணைப் பற்றி பார்ப்போம்!!!

### கல்லணை

கல்லணை இந்தியாவின், தமிழ்நாட்டில் உள்ள திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது, மற்றும் இது 19ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

பழமை: கல்லணை, தமிழ்நாட்டின் திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது மற்றும் இது 19ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

### கட்டுப்பாட்டு அமைப்பு:

இந்த அணை கவரனூர் ஏரியில் இருந்து காவிரி நதியின் நீரை திறப்பதற்கும், சேமிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

### அணையின் உயரம்:

இந்த அணையின் உயரம் சுமார் 16 மீட்டர் (52 அடி) ஆகும்.

## முக்கியத்துவம்:

கல்லணை, வேளாண்மை பண்ணைகளுக்கு நீர் வழங்குவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றது, குறிப்பாக திருவள்ளூர், சென்னை மற்றும் அருகிலுள்ள பகுதிகளுக்கு.

## நீர்வரத்து அமைப்பு:

இந்த அணையின் வடிவமைப்பில், நீர் வெளியேறும் வழிகள் மற்றும் நீர் சுழற்சி அமைப்புகள் மிகவும் திறமையான முறையில் அமைக்கப்பட்டு, நீர் மேலாண்மையில் மாபெரும் சாதனைக் காத்துள்ளது.

## பொறியியல் ஆக்கத்திற்கான விருது:


இச்சில மிகச் சிறந்தக் கட்டிடப் பாணி மற்றும் பொறியியல் தொழில்நுட்பத்தில் கல்லணை அணை சோழர்களின் அறிவையும் திறனையும் வெளிப்படுத்துகிறது.

## அழகான கல் கட்டுமானம்:

இந்த அணை கல் கட்டுமானத்தால் மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. கல் சுவர்கள் மற்றும் பெரிய நிலைத்தணைகள், நீர் திறப்பைக் கட்டுப்படுத்தும் திறனைக் கொண்டுள்ளன.

## சோழ வரலாற்றின் சின்னம்:

கல்லணை அணை, கரிகால சோழனின் மிகப்பெரும் திறமையின் சின்னமாக இருக்கிறது. இதன் கட்டுமானம், அவரது ஆட்சியின் சக்தி மற்றும் அறிவை வெளிப்படுத்துகிறது.



இதுவே உலகின் மிகப்பழமையான நீர்ப்பாசனத் திட்டம் என்றும் கூறப்படுகிறது. மணலில் அடித்தளம் அமைத்து கல்லணையைக் கட்டியப் பழந்தமிழர் தொழில்நுட்பம் இன்று வரை வியத்தகு சாதனையாகப் புகழப்படுகிறது.

இந்த அற்புதமான அணை, காலகாலமாக தமிழ்நாட்டின் நீர் மேலாண்மையில் முக்கியப் பங்கு வகிக்கிறது, மேலும் அதன் வரலாற்று மற்றும் கட்டிடக் கலை வெளிப்பாடுகள் உலகளாவியக் கவுரவத்தை பெற்றுள்ளன.

# தேசியக் கொடியின் இறுதி வடிவம்

## திருமதி - ஆனி ஜோஷிலா பிரின்ஸ் லியோ



சுரையா தியாப்ஜியின் இந்திய தேசியக் கொடியின் இறுதி வடிவத்தை உருவாக்கிய பங்கைக் குறிப்பது. அசோகவிழியை கொடியின் மையத்தில் சேர்த்து, அது தர்மத்தையும், சட்டத்தையும், ஒற்றுமையையும் குறிக்குமென அமைத்ததைக் விளக்குகிறது. 1947 சுதந்திரத்திற்கு முன்னதாகவே இந்த வடிவம் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரலாற்றையும் விளக்குகிறது. சுரையா தியாப்ஜியின் மறக்கமுடியாத பங்களிப்புக்கு மரியாதை செலுத்தி, தேசிய ஒருமைப்பாட்டையும் பெருமையையும் முன் வைக்கிறது.

### சுரையா தியாப்ஜியின் இந்தியக் கொடி வடிவம்:

இந்திய தேசியக்கொடியின் இறுதி வடிவத்தை உருவாக்குவதில் சுரையா தியாப்ஜி குறிப்பிடத்தக்க பங்கு வகித்தார். 1947ஆம் ஆண்டில் சுதந்திரத்திற்கு முன்னதாகவே, கொடியின் வடிவம் மீதான விவாதங்கள் நடைபெற்றன, இதன் மூலம் அசோகவிழி (Ashoka Chakra) தேசியக் கொடியில் இடம் பெற்றது..

### சுரையா தியாப்ஜியின் பங்களிப்பு
### அசோகவிழி சேர்த்தல்:

முதலில் பிங்காலி வெங்கையா உருவாக்கிய கொடி வடிவில் சரக (Spinning Wheel) இடம்பெற்றிருந்தது. சுரையா தியாப்ஜி மற்றும் அவரது கணவர் பத்ருதீன் தியாப்ஜி ஆகியோர் சேர்ந்து சரகத்தைக் கடந்து அசோகவிழி சிறந்த ஒரு தேசிய அடையாளமாகத் திகழுமென சுட்டிக்காட்டினர்.

அசோகவிழி, தர்மம் மற்றும் சட்டத்தின் அடையாளமாக, இந்தியாவின் பண்பாட்டிலும் வரலாற்றிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்பட்டது.

### மூவண்ணிறக் கொடி:
### கேசரி (ஆரஞ்சு):

தியாகம் மற்றும் வீரத்தைக் குறிக்கிறது.

### வெள்ளை:

அமைதி மற்றும் உண்மையை பிரதிபலிக்கிறது.

### பச்சை:

வளர்ச்சி மற்றும் விவசாய செழிப்பின் அடையாளமாக உள்ளது. நடுவிலான அசோகவிழி: தர்மம், சரியான பாதை, மற்றும் அடிப்படை நடைமுறைகளின் அடையாளமாக செயல்படுகிறது.

## இறுதி வடிவம் மற்றும் ஒப்புதல்:


1947ஆம் ஆண்டின் ஜூலை 22ஆம் தேதி, இந்தியா சுதந்திரம் அடையும் முன்னதாக, Constituent Assemblyயில் இக்கொடியின் இறுதி வடிவம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அசோகவிழியுடன் கூடிய இந்த மூவண்ணக் கொடி இந்தியாவின் ஒருமைப்பாட்டையும், கலாச்சார பன்முகத்தையும் பிரதிபலிக்கிறது

## சுரையா தியாப்ஜியின் மரியாதை:

சுரையா தியாப்ஜியின் பங்களிப்பு மிகச்சிலருக்கே தெரிந்துள்ள செய்தியாக இருக்கலாம். ஆனால், இந்திய தேசியக்கொடியின் இறுதி வடிவத்தை மேம்படுத்திய அவரது பணி சுதந்திர இந்தியாவின் அடையாளமாகவும் கருவியாகவும் தொடர்ந்து நிற்கிறது.

"மூவண்ணம் நம் பொக்கிஷம், அசோகவிழி நம் அடையாளம்!"
இது போன்ற பங்களிப்புகள் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஒற்றுமையையும், பொதுமக்களின் தியாகத்தையும் வெளிப்படுத்துகிறது.

## வண்ணம் தீட்டி படத்துடன் வார்த்தைகளை கோடிட்டு இணை:




## கண்டுபிடி கண்டுபிடி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இ | க | ரா | வூ | ச | றி | ன் | ப |
| கு | உ | ர | ல் | ழ் | ஞ | ங் | சி |
| ஊ | ரு | ட் | டி | கு | ரு | வி | ல |
| ஒ | ட் | ட | க | ம் | எ | ஜ | ந் |
| தை | த் | று | சி | டி | று | ம் | தி |
| கே | யெ | தி | ம | ன் | லை | ட் | ட |
| து | பு | ம் | று | எ | ணா | க | ந |
| லி | டை | ந | ரி | ம் | லி | ஓ | த |

கரடி ஓணான் நரி எறும்பு சிலந்தி

சிறுத்தை ஒட்டகம் பன்றி குருவி எலி

## பொங்கல் ஓவியம்






**செல்வன் - ஹர்ஷித் கார்த்திகேயன்**

## தமிழ் பழமொழிகள்

1. ஆழம் தெரியாமல் காலை விடாதே (Look before you leap).
2. அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த இராத்திரியில் குடை பிடிப்பான் (Put a beggar on horseback).
3. மின்னுவதெல்லாம் பொன்னல்ல (All that glitters are not gold).
4. அகம்பாவம் அழிவை தரும் (Pride comes before fall).
5. குறைகுடம் கூத்தாடும் (Empty vessels make the most noise)

### நோக்கம்:

நம் வாழ்க்கையில் பல பல மொழிகளை பார்த்திருப்போம் கேட்டிருப்போம் ஏன் நம்ம கூட சில பேருக்கு பல மொழியை கூறியிருப்போம். நம் முன்னோர்கள் நமக்கு பல பழமொழிகளை கூறியுள்ளனர். இப்பவும் நமது தாத்தா பாட்டி நாம் எந்த ஒரு செயல் செய்தாலும் அதற்கு ஒரு பழமொழி கூறுவார்கள்.அந்த பழமொழிக்கு நம் எதிர்த்து பேசினால் பழமொழி சொன்னால் அனுபவிக்கணும் ஆராயக்கூடாது என்று கூறுவார்கள்.

## எங்கள் கிராமப் பொங்கல்

## மொட்டு உயர்நிலை மாணவர்களுக்கான நாடகக் கதை

எழுத்தாளர் - திருமதி. ஆனி ஜோஷிலா பிரின்ஸ் லியோ
குறிஞ்சி கல்விக்கூடம்

**தேன்மொழி:**

உன் பட்டு பாவாடை ரொம்ப அழகா இருக்குடி!

**அன்பழகி:**

இந்த வருஷம் நம்ம கிராமத்துல தான் பொங்கல் கொண்டாட போறேன். அதனால, எங்க அம்மா எனக்கு புதுசா பட்டு பாவாடை வாங்கி கொடுத்தாங்க, அது எனக்கு ரொம்பப் பிடிச்ச கலர்!

சரி வா, அங்க ரெண்டு பசங்க இருக்காங்க. அவங்க கூட சேர்ந்து நாங்களும் எப்படி பொங்கல் பண்டிகை celebrate பண்ணுறாங்கனு பாக்கலாம்.

**வேளண்:**

டேய், எப்படிடா இருக்க? ஒரே ஒரு நாள் ஸ்கூல் லீவ் விட்டா, எங்க அம்மா வீட்ல வேலை சொல்லிட்டு இருப்பாங்கடா!

**கதிரவன்:**

உங்க வீட்ல மட்டும் இல்லடா! எங்க வீட்லயும் மாடை சுத்தமா தெளிக்க சொல்றாங்க, கோலம் போட help பண்ண சொல்றாங்க. அப்புறம் sweets செய்யும்போது கூட help பண்ண சொல்றாங்க. கேட்டா, "பொங்கல் பண்டிகைக்கு நாம் இதெல்லாம் செய்யணும்!" னு சொல்றாங்க.

**வேளண்:**

பொங்கலா!! எனக்கு தெரிஞ்ச பொங்கல்னா சுடச்சுட சாம்பார், சட்னி, side dish வடை, mild taste-a கொஞ்சம் பொங்கல் வைத்து சாப்பிடுவதுதான்!

**அப்பா:**

என்னப்பா, பொங்கல் பண்டிகையைப் பற்றி பேசிக்கிட்டே இருக்கீங்களா?

**வேளண்:**

ஆமாம் மாமா! நான் சொல்றேன், சாம்பார்தான் பொங்கலுக்கு ரொம்ப செம! ஆனா கதிரவன், சட்னி தான் நல்ல காம்பினேஷன்னு சொல்றான்.

**கதிரவன்:**

இருடா! அவர் சும்மாவே என்னை திட்டிட்டு இருப்பாரு, நீ வேற காமெடி பண்ணிட்டு இருக்க!

**அப்பா:**

கதிரவா, உன் பெயருக்கும் பொங்கல் பண்டிகைக்கும் ஒரு பெரிய தொடர்பு இருக்கு, அதை உனக்கு தெரியுமா?

**கதிரவன்:**

(ஆச்சரியமாக) என்னப்பா, என்ன தொடர்பு? சொன்னேன்னு கேட்கணும்!

**கதிரவன்:**

இல்ல, அப்பா, அப்படி என்ன அர்த்தம் இருக்கு? சொல்லுங்களேன், கேட்போம்.

**அம்மா:**

வேளண், உன் பெயருக்கு கூட பொங்கல் தொடர்புள்ள ஒரு நல்ல கருத்து, மிக பொருள் இருக்குது.

**வேளண்:**

அப்படியா? சொல்லுங்க, கேக்க ரொம்ப ஆசையா இருக்கு.

தேன்மொழி மற்றும் அன்பழகி பேசுகிறார்கள்: "வா, இந்த பசங்களோட சேர்ந்து பொங்கல் பண்டிகையை பத்தி கொஞ்சம் டீடைலா தெரிஞ்சுக்கலாம்."

**அப்பா:**

முதல்ல பொங்கலைப் பற்றி கொஞ்சம் தெரிஞ்சுக்கோங்க. தமிழர் பாரம்பரியப் பண்டிகைகளில் மிகவும் பழமையானப் பண்டிகை தான் பொங்கல். விவசாயிகளாகிய நமக்கு, வருடம் முழுவதும் உதவி செய்யும் பசுக்கள், நிலம், தானியம் மற்றும் சூரியன் ஆகியவற்றுக்கு நன்றி கூறி கொண்டாடும் பண்டிகை தான் பொங்கல்.

அட, நம்ம கதிரவனே வந்துட்டாரு, அவர்கிட்டயேப் பொங்கல் சிறப்பையும், உங்க பெயர்களோட அர்த்தத்தையும் கேட்டு தெரிஞ்சுக்கோங்க.

**கதிரவன்:**

என்ன அப்பா, என்ன போய் வாங்க போங்கன்னு மரியாதையாக கூப்பிடுறீங்க?

**சூரியன்:**

கதிரவா, அவர் உன்னை கூப்பிடல, என்னதான் கூப்பிட்டாரு?

**வேளண்:**

Sun God, உங்களுக்கும் பொங்கலுக்கும் என்ன சம்பந்தம்?

**சூரியன்:**

நான் தான் கதிரவன்.

**கதிரவன்:**

அப்போ நான் யாரு?

**சூரியன்:**

நீயும் கதிரவன் தான், ஆனால் எனக்கு நன்றி செலுத்தும் வகையில் தான் வேளண், உன் தந்தை உனக்கு என்னுடையப் பெயரை வச்சிருக்கார். என்ன "Sun God" என்று கூட சொல்லுவாங்க.

**கதிரவன்:**

மிஸ்டர் சன், காட் வேளண் என் ஃப்ரெண்ட், என் அப்பா இல்லை.

**சூரியன்:**

வேளண் என்றால் farmer - விவசாயி என்று பெயர். என் நண்பன், உன் தந்தை விவசாயத்தின் மேல் உள்ள அன்பினால் தான் உனக்கு வேளண்என்று பெயர் வைத்திருக்கிறார்.

**அம்மா:**

இப்போ தெரிஞ்சா உங்க பேரோட அர்த்தங்கள். நம்ம அறுவடைப் பண்ண நெல் தானியங்களைப் பொங்கல் செய்வதற்கு எடுத்துட்டு வர போலாம். கயல்விழி, இங்க ஓடி சூர்ய பகவானுக்கு வணக்கம் சொல்லு.

**கயல்:**

வணக்கம் சூரிய பகவானே.

**சூரியன்:**

வணக்கம் கயல். நானும் உங்க கூட வந்து என்னோட நண்பரான பயிர்களுக்கு ஒரு visit பார்த்து வரறேன்.

சூரியன் - பயிருக்கு ஆஹா, இவ்வளவு அழகா வளர்ந்திருக்கீங்க. நீங்க நன்றாக பலன் தரவேண்டும் என்று தான் நான் தினமும் வானத்தில் வந்து போகின்றேன். உன் வளர்ச்சியில் தான் நான் என் விவசாயின் மகிழ்ச்சியை பார்க்கின்றேன்.

**கயல்:**

அம்மா, ஏன் சங்கோர்ட் இப்படி சொல்றார்?

**அம்மா:**

பொங்கலை அறுவடைத் திருநாளாக சொல்லுவாங்க. திருநாளில் சொல்லுவாங்க, வருடம் முழுவதும் உழைக்கும் விவசாயிக்கு பலன் எப்போ கிடைக்கும்னா தைத்திருநாளில் தான். அங்க பாரு, நம்ம அப்பாவோட உழைப்பில் எவ்வளவு அழகா பயிர்கள் வளர்ந்திருக்குது.

**பயிர்:**

அன்புள்ள சூரியனே,

உங்கள் ஒளியும் வெப்பமும் இல்லாமல், நாங்கள் ஒரு விதையாக இருந்து செழித்து வளர முடியாது.

நீங்கள் உங்கள் ஒளியால் எங்களை எழுப்பினீர்கள், உங்கள் வெப்பத்தால் எங்கள் உயிர்க்காற்றை வளப்படுத்தினீர்கள். ஒவ்வொரு கதிரும் எங்களுக்குச் சக்தி தந்தது, நாங்கள் தானியங்களாகப் பழுத்து உலகிற்குப் பயனளிக்க வழிவகுத்தது.

விவசாயி நண்பனே, என் குடியானவர், உங்கள் தோளில் பிறந்தோம், உங்கள் கையால் வளர்ந்தோம், நிலத்தை விழுதாலும், கதிரவனும் வேளானும் நீரை ஊற்றியதாலும் நாங்கள் உயிர்பெற்றோம்.

சூரியனை உங்கள் சக்திக்கு நன்றி, மழை நீரை நீங்கள் தந்த நம்பிக்கைக்கு நன்றி. உழவரே, உங்கள் உழைப்பும் அர்ப்பணிப்பும் எங்களை வளமாக்கியது. உங்கள் அனைவருக்கும் நன்றி.

**அப்பா:**

இப்போ உங்களுக்கு பொங்கலோட அர்த்தம் தெரியுமா? நம்முடைய சாப்பிடுற ஒரு பிடி அரிசிக்கு பின்னாடி எவ்வளவு உழைப்பும் விஷயமும் இருக்குனு, இப்போ உங்களுக்கு தெரிஞ்சுதா?

**கதிரவன்:**

அறுவடைப் பண்ண பயிர் எல்லாம் இப்போ நம்ம வீட்டுக்கு எடுத்துட்டுப் போயிட்டு, அப்பப் பொங்கல் பண்ண போலாமா?

**அம்மா:**

சரியா சொன்ன கதிர், புதுசா அறுவடை செஞ்ச அரிசியா எடுத்துட்டு வந்து, அதுக்கப்புறம் அந்த அரிசியை நல்லா கழுவிட்டு, ஒரு புது பானையில பாலு வச்சு, பாலு பொங்கி வரும் போது அதுல அந்த அரிசியையும், அதுக்குள்ள போட்டாங்க.

**வேளண்/கதிரவன்/கயல்:**

அது பொங்கி வரும்போது, அம்மாவும் மத்த எல்லாரும் "பொங்கலோ பொங்கல், பொங்கலோ பொங்கல், பொங்கலோ பொங்கல்!" அப்படின்னு சொல்லுவாங்க. ரெடியா இருங்க! அதுக்கப்புறம் நிறைய பேரு குலவி சத்தம் போடுவாங்க.

**அப்பா:**

அப்புறமா, அந்த பொங்கல் வாழை இலையில் வைத்து எல்லா பொருட்களையும் வச்சு, சூரிய பகவானுக்கு கும்பிடு வாங்க. விவசாயம் பண்றதுக்கு யாரெல்லாம் help பண்றாங்களோ, எல்லாருக்கும் நன்றி சொல்வாங்க. எல்லா வருஷமும் அறுவடை நல்லா இருக்கணும்னு கேட்பாங்க.

**அன்பழகி:**

குலவை சத்தம் னா? எப்படி இருக்கும்?

**வேளண்:**

(குலவை சத்தம் போட்டு காட்டுவான்).

**கயல்:**

அப்புறம் எல்லாரும் பொங்கல் சாப்பிட்டு, கரும்பு சாப்பிட்டு, என் கண்ணு குட்டி சீதாவுக்கு, மத்த கண்ணு குட்டி மாடுகளுக்கு எல்லாம் போய் பொங்கல் ஊட்டலாமா?

நன்றி..........



நன்றி - மொட்டு உயர்நிலை ஆசிரியை திருமதி - ஆனி ஜோஷிலா பிரின்ஸ் லியோ. மற்றும் மாணவர்கள்

# கைவினைப் பொருள்கள் வைத்து பொங்கல் அலங்காரம்




நீங்களும் உங்கள் வீட்டில் உள்ள தானியங்களை வைத்துப் பொங்கல் அலங்காரம் செய்யலாம்.

குறிப்பு: பெற்றோர்கள் உங்களுடன் இருக்கும்பொழுது மட்டும் செய்ய வேண்டும்.



இந்த ஓவியமும் உங்களிடம் இருக்கும் வண்ணக்காகிதம் மற்றும் பஞ்சை வைத்தே பண்ணலாம்.

குறிப்பு: பெற்றோர்கள் உங்களுடன் இருக்கும்பொழுது மட்டும் செய்ய வேண்டும்.

அறிவிப்பு: அன்பார்ந்த வாடிக்கையாளர்களே?

வரும் பிப்ரவரி மாதம் வரும் தேதிக்குள் இந்த கைவினை ஓவியம் தயார் செய்து அனுப்புபவர்களுக்கு நிகழினி நாளிதழ் சார்பாக பரிசுகள் வழங்கப்படும்.

அனுப்பவேண்டிய ஆன்லைன் முகவரி: chandra.srithar01@gmail.com.

# இறகைப்போலே பறக்கிறேனே!!!

**திருமதி - திவ்யா சங்கரசுப்பிரமணியன்**



ஞாயிற்றுக்கிழமை - வழக்கம் போல காலை உணவுக்குப்பின் அப்பா தன் கடைக்குச் சென்று விட்டார். வித்யா அம்மாவுக்கு வீட்டில் உதவி செய்து கொண்டிருந்தாள். அவள் அப்பா மளிகைக் கடை வைத்துள்ளார், அவர்கள் வீட்டிலிருந்து ஒரு பத்தடி தொலைவில் தான், அவள் சகோதரிகள் இருவரும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் கண்டு களித்துக்கொண்டு இருந்தார்கள். பத்து வயதே ஆன வித்யா பெரும்பாலும் தன் பெற்றோர்கள் செய்யும் வேலைகளில் தன்னாலான உதவிகளைச் செய்வாள்.

அம்மா வித்யாவை அழைத்துப் பாட்டி வீட்டிற்குச் சென்றுப் பித்தளையிலான ஒரு பானையை வாங்கி வரச் சொன்னாள். வித்யாவிற்கு இது வாடிக்கை தான். ஏதாவது கொடுக்கவும், வாங்கவும் அவள் அடிக்கடி அங்கு செல்வாள். மூன்று தெருத் தள்ளி இருக்கும் தன் அப்பா பிறந்து வளர்ந்த வீடு அவளுக்கு மிகப் பிடிக்கும். ஆம்! அது அவளது அப்பாவின் அம்மா தான்! தன் அப்பாவின் கடை வழியாகத் தான் அவள் போக வேண்டும்.

அப்பாவின் கடைக்குச் சென்று , "ஆச்சி வீட்டுக்குப் போய் அம்மா பானை வாங்கிட்டு வரச் சொன்னாங்க. போயிட்டு வரேன் பா". சரி, பாத்துப் போயிட்டு வா மா? அப்பா சொன்னார். அளவாகத் தான் பேசுவார் அப்பா. அனைவருக்கும் அவரைப் பிடிக்கும்.

அவள் தன் பாட்டி வீட்டை நெருங்கியபோது பக்கத்து வீட்டுப் பெரியம்மா என்ன? ஆச்சிய பாக்கவா? என்று கேட்டார். ஆம்! அந்த தெருவில் உள்ள அனைவருமே அவளுக்குச் சொந்தமே. பாட்டி வீடு உள் பக்கமாகப் பூட்டி இருந்தது. அந்தப் பெரியம்மா தன் வீட்டினுள்ளே சென்று பாட்டிக்குக் குரல் கொடுத்தார். அது ஒட்டி இருந்த இரட்டை வீடு. ஒரே மாதிரி இருக்கும் முகப்பு , உள்ளே நுழைந்தவுடன் இருக்கும் பெரிய கூடம் என அனைத்தும் ஒன்று போல் இருக்கும்.

பாட்டி விரைந்து வந்து கதவைத் திறந்தாள். வித்யாவை உள்ளே அழைத்து உச்சி முகர்ந்தாள். புடவைத் தலைப்பை எடுத்து முகம் துடைத்து “வெயில்ல நடந்து வந்தியா?” என்று வித்யாவை வாரி அணைத்துக் கொண்டார். அவள் அவ்வாறு செய்வது வாடிக்கை தான்.

வித்யா வந்த விஷயத்தைச் சொன்னாள். நான் நினைச்சேன் நீ வாங்க வருவனு? எடுத்து வச்சுருக்கேன் வா,  என்றுப் பின்னால் இருக்கும் தொழுவத்துக்கு அழைத்துச் சென்றார். அப்பா சிறுவயதாக இருக்கும்போது நிறைய மாடுகள் அங்கே தான் வைத்து வளர்த்தார்களாம். அதனால் தான் அதனைத் தொழு என்றும் தொழுவம் என்றும் இன்றளவும் அழைக்கிறார்கள்.

பானையை எடுத்துக் கொடுத்தாள் ஆச்சி. அடுக்களைக்குக் கூட்டி வந்து "தோசைச் சுட்டுத் தரவா?  சாப்பிடுறியா?"  என்று கேட்டாள் ஆச்சி. "வேணாம் ஆச்சி" என்று சொன்ன வித்யா, "ஆச்சி, எனக்கு தோசைச் சுட சொல்லித்தருவீங்களா? அம்மா எனக்கு தோசைச் சுடவே வராதுனு என்னை ஏசிட்டாங்க " என்றாள். வைத்திருந்த டப்பாவில் இருந்து கை சுற்று முறுக்கு ஒன்றை எடுத்துக் கொடுத்த ஆச்சி,"ஏன் அப்படிச் சொன்னா? அவா ஏதாது வேலையா இருந்துருப்பா. அன்னைக்கு ஒரு நாள் நீ இங்க வந்துருக்கப்போ ரசத்துக்கு அம்மில நுணுக்குனியே எவ்வளவு வாசமா இருந்துச்சு தெரியுமா?

இந்த கை மணம் தா அதுக்குக் காரணம்" என்று வித்யாவின் கையைப் பிடித்துச் சொன்னாள். ஆச்சி தோசையை வித்யாவைச் சுடச் சொன்னாள்.

என்ன ஆச்சரியம் வித்யாவுக்கு அழகாக வந்தது. "அப்போ ஏன் ஆச்சி அம்மா சுட சொன்னப்போ எனக்கு ஒழுங்காவே வரல" என்றாள் வித்யா. "நீ உனக்கு வராதுனே நினைச்சுட்டு சுட்டுருப்ப. இனிமே எதுனாலும் வரும்னு நினைச்சு பண்ணு. அதுவும் சமையல் உனக்கு நல்லா வரும் மா கை மணம் அப்படி".

வித்யாவிற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. "இனிமே உன் அம்மா தோசைச் சுட சொன்னா, நல்லா இதை மாதிரியே சுடு. நா சொல்லிக்குடுத்தேன்னு சொல்லாத. உன் அம்மா சொல்லிக்குடுத்தத தான் திரும்ப திரும்ப செஞ்சுப் பாத்தனு சொல்லு. அவளும் சந்தோசப்படுவா".

ஆச்சி எப்போவுமே அம்மாவை விட்டுக்கொடுத்தோ, குறை சொல்லியோ பேசியதே இல்லை. சில நிமிடம் வித்யாவிற்கு அவள் அப்பாவுடன் இருப்பது போல இருந்தது.இப்போது அவளுக்குப் புரிந்தது அப்பாவின் குணம் எங்கிருந்து வந்தது என்று. கை சுற்று முறுக்குடன் போன கோடையில் வெயிலில் போட்டுக் காய வைத்திருந்த கூழ் வத்தல், வடகம் எல்லாம் ஒரு பையில் போட்டுக்கொடுத்தாள் ஆச்சி.

தொழுவத்தில் இருக்கும் கதவு வழியாக, தெருவின் பின் வழியாக வித்யாவை போகச் சொன்னாள்.

"நா தான் பானையைத் தேட நேரமாக்கிட்டேன்னு உன் அம்மா கேட்டா சொல்லு. யாரையும் காணோமே பையைக் கொண்டு வந்து தரச்சொல்ல. நிறைய வச்சுட்டேனே! பை ரொம்ப கனமா இருக்கா?"ஆச்சி கேட்டதும் வித்யா சொன்னாள்,"கனமா இல்ல ஆச்சி!!!" சொல்லிவிட்டு விடை பெற்றாள்.

ஆம்! வித்யா சொன்னது, அவள் மனதை! பை கொஞ்சம் கனமாகத் தான் இருந்தது.

ஆச்சியுடன் பேசியதையெல்லாம் அசை போட்டபடியே வேகமாக நடக்க ஆரம்பித்தாள் வித்யா வீடு நோக்கி, இறகைப்போல அவள் மனது பறந்து கொண்டிருந்தது...

பறக்கும்........

## ஓவியம்






ஆன்மாவின்
மொழி
அழகின் விழி
விழியின் ஒளி
அனைத்தும்
ஓவியத்திற்கு
மட்டுமே உண்டு!

**செல்வன் - ஹர்ஷிவ் எல்லப்பா சந்திரா ஸ்ரீதர்**

# குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கத்தின் இனிய இரண்டாவது பொங்கல் திருவிழா




சங்க காலத்தில் வாழ்ந்த தமிழ்நாட்டு மக்கள் வாழ்ந்து வந்த நிலத்தினை 5 வகையாக பிரித்தனர். அந்த 5 வகை நிலங்களானது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என பிரிக்கப்பட்டுள்ளது. ஐந்து வகை நிலங்களுக்கும் தனித்தனியாக தெய்வம், தொழில், உணவு, மரம், பூ, பறவை, விலங்கு போன்றவை தனியாக உள்ளது. குறிஞ்சி நிலத்தினை மலையும் மலை சார்ந்த பகுதி என்று அழைத்தனர். மலைக்கு அடுத்து இருந்த நிலப்பகுதி காடும், காட்டைச் சார்ந்த இடப்பகுதியை முல்லை நிலம் என்றுஅழைத்து வந்தனர். முல்லைக்கு அடுத்து இருந்த வயலும் வயலைச் சார்ந்த இடத்தை மருதம் என்று குறிப்பிட்டனர். கடலையும் கடலைச் சார்ந்த இடத்தையும் நெய்தல் நிலம்என்று கூறினார்கள்.

பெயருக்கு தகுந்தாற்போல் குறிஞ்சி முத்தமிழ் சங்கம், பொங்கல் பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடினர். பின்வரும் நிகழ்ச்சிகளுடன் அழகாகவும், மிக சிறப்பாகவும் நடந்தது.

**நிகழ்ச்சிகள்:**

**வரவேற்புரை:**

குறிஞ்சிக் கல்விக்கூடத்தின் முதல்வர் திருமதி பத்மா தினேஷ் அவர்கள் வரவேற்புரை வழங்கி நிகழ்ச்சியைத் துவக்கி வைத்தார்.

குறிஞ்சி முத்தமிழ் சங்கத்தின் நிறுவனர் மற்றும் உறுப்பினர் திரு. சுகுமாறன் முதன்மை மாரியப்பன் அவர்கள் இந்த சங்கத்தை எதை நோக்கி ஆரம்பித்தாரோ, அப்பாதைக்கு வழி கிடைத்தாற்போல் வெற்றி விழாவாகவும் அமைந்தது.

இளையத் தலைமுறையின் எதிர்காலத் தமிழ் வாழ்க்கைக்கு வெற்றி கிடைத்தது. ஏனெனில், இந்த நிகழ்ச்சியில் 80 சதவிகிதம் குறிஞ்சி கல்விக்கூட மாணவர்கள் மற்றும் குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கத்தின் இளம் தலைமை உறுப்பினர்கள் மற்றும் குறிஞ்சி இளைஞர் மன்றம் மாணவர்கள் என அனைத்திற்கும் அவர்களை வழி நடத்தி வெற்றி கண்டார். திரு.சுகுமாறன் மாரியப்பன் அவர்களுக்கு நன்றி சொல்வதில் மகிழ்ச்சி கொள்கிறோம்.

# பொங்கல் விழாவின் தலைமை உரை

## அருள்திரு முனைவர் செபாஸ்டின் டைட்டஸ்



அவர்கள் தலைமை விருந்தினராக வருகைப் புரிந்து உரையாற்றினார். இப்பொழுதுள்ள காலத்தில் மாணவர்களின் நலன் மற்றும் அமெரிக்க வாழ்வில் அவர் கண்ட அனுபவத்தை அழகாக எடுத்துரைத்தார்.

# குறிஞ்சி பொங்கல் விழாவின் --- தன்னார்வலர்கள்

கிராமத்துப் பொங்கல் நாடகத்திக்கான தன்னார்வலர்கள் அவர்கள் பணியை சிறப்பாக முடித்ததோடு மாணவர்களின் தமிழ் திறமையை வெளிகொண்டுவந்தனர். கிராமத்து பொங்கல் நாடக குழுவிற்கு நன்றி.

### கிராமத்துப் பொங்கல் நாடகத்திற்கான தன்னார்வலர்கள்:

1. நந்தினி மாணிக்கவேல்
2. ஆனி ஜோஷிலா லியோ பிரின்ஸ்
3. அபிராமி பெரியசாமி
4. சந்திரா ஸ்ரீதர்

### நிகழ்ச்சி தொகுப்பாளர்கள்:

1. யாழிசை சந்திரா ஸ்ரீதர்
2. கோகுல் இனியா
3. அவந்திகா செல்லுக்கா தினேஷ்
4. சுருதி மகேஷ் குமார்
5. ஜெகன் அருண் பிரசாத்
6. மஹஷ்ரிதா அசோக்
7. ஸ்ரீவத்சா முருகன்
8. சஞ்சனா பரணீதரன்
9. ஸ்ம்ருதி பிரசாந்தி விஜய்
10. கிருபன்யா சுரேஷ் பாபு

### திருக்குறள் ஒப்புவித்தல் :

1. மித்ரா பிரசாத்

### குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கத்தின் உறுதி மொழி :

1. செல்வி. அவந்திகா செல்லுக்கா தினேஷ்

## மழலை பங்கேற்பாளர்கள்:

1. தன்விகா முருகானந்தம்
2. சுஹின் பிரவீன் பாபு
3. கவின் குமரன் சுரேஷ் பாபு
4. வினய் சுடலைமுத்து
5. வருண் அரவிந்தன்
6. ஆதியந்த் ஸ்ரீனிவாசன்
7. ஆதிரா அருண் பிரசாத்
8. அனன்யா மணிகண்டன்
9. சிந்து பிரசாத்
10. வேத ஸ்ரீ சிவகுமார்
11. ஜெஸ் ஐடென் கில்பர்ட்
12. லெவோன் அஸெல் கில்பர்ட்
13. சஹானா ராமகிருஷ்ணன்

# குறிஞ்சி இசைக்குழு

## குறிஞ்சி இசைக்குழு தலைவர்கள்

1. அருண் பிரசாத் ரெங்கசாமி
2. கோகுல் கிரிதரன்
3. சங்கர் கோலப்பன்
4. மகேஷ் குமார் சிவசுப்பிரமணியன்
5. பிரசாந்தி விஜய்

## குறிஞ்சி இசைக்குழு -- பாடகர்கள்

1. ஆதிரா அருண் பிரசாத்
2. ஆஷிகா மணிகண்டன்
3. சுஹின் பிரவீன் பாபு
4. யாழிசை சந்திரா ஸ்ரீதர்
5. அவந்திகா செல்லுக்கா தினேஷ்
6. சுருதி மகேஷ் குமார்
7. மஹஷ்ரிதா அசோக்
8. ஸ்ரீவத்சா முருகன்
9. சஞ்சனா பரணீதரன்
10. ஸ்ம்ருதி பிரசாந்தி விஜய்
11. கிருபன்யா சுரேஷ் பாபு
12. அம்ரிதா  செல்லுக்கா தினேஷ்
13. ஜோயல் செசில்
14. நந்தினி மாணிக்கவேல்
15. சந்திரா ஸ்ரீதர்
16. பத்மா  தினேஷ்

## இசைக்கருவி வாசிப்பாளர்கள்

1. அஸ்மிதா சங்கர்
2. தஷ் ராகவேந்திரா கோகுல கிரிதரன்
3. ஆத்விக் ராஜேஷ்
4. அன்வித ராஜேஷ்
5. மஹாஸ்ரீதா அசோக்
6. ஜெகன் அருண் பிரசாத்
7. கவிலயா கோகுல கிரிதரன்
8. கவின் பிரவீன் பாபு

## பொங்கல் சிறப்புப் பட்டிமன்றம்

பொங்கல் சிறப்புப் பட்டிமன்றம் தலைப்பு - மகிழ்ச்சியான வாழ்க்கைக்குத் மிகவும் தேவை அறிவியலா? நம்பிக்கையா?

## பட்டிமன்ற நடுவர்

1. பிரசாந்தி விஜய்

## மகிழ்ச்சியான வாழ்க்கைக்குத் மிகவும் தேவை அறிவியலே  - குழு

1. அபிராமி பெரியசாமி
2. அருண் பிரசாத் ரெங்கசாமி
3. சந்திரா ஸ்ரீதர்

## மகிழ்ச்சியான வாழ்க்கைக்குத் மிகவும் தேவை நம்பிக்கையே   - குழு

1. ஸ்ரீதர் ராஜேந்திரன்
2. பத்மா தினேஷ்
3. தேவி பிரியா பிரவீன் பாபு

# பொங்கல் நிகழ்ச்சி புகைப்படம்







குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கத்தின் முதன்மை உறுப்பினர் திரு. அருண் பிரசாத் ரெங்கசாமி நன்றியுரை வழங்க விழா இனிதாய் நிறைவடைந்தது.

## நன்றி

# மகாகவி பாரதி கவிதை விளக்கம் போட்டி
# பாரதி சொல்வது என்ன?

தேடிச் சோறுநிதந் தின்று
பல சின்னஞ் சிறுகதைகள் பேசி
மனம் வாடித் துன்பமிக உழன்று
பிறர் வாடப் பல செயல்கள் செய்து
நரை கூடிக் கிழப்பருவம் எய்தி
கொடுங் கூற்றுக் கிரையெனப்பின் மாயும்
பல வேடிக்கை மனிதரைப் போலே
நான் வீழ்வே னென்று நினைத்தாயோ?

நின்னைச் சிலவரங்கள் கேட்பேன் - அவை
நேரே இன்றெனக்குத் தருவாய் - என்றன்
முன்னைத் தீயவினைப் பயன்கள் - இன்னும்
மூளா தழிந்திடுதல் வேண்டும் - இனி
என்னைப் புதியவுயி ராக்கி - எனக்
கேதுங் கவலையறச் செய்து - மதி
தன்னை மிகத்தெளிவு செய்து - என்றும்
சந்தோஷங் கொண்டிருக்கச் செய்வாய்...
- மகாகவி பாரதியார் பாடல

Here is the translation in English:

"Searching for food daily and eating,
Telling many small tales,
With a troubled mind, suffering greatly,
Causing others to suffer through many actions,
Growing gray and reaching old age,
Eventually becoming prey to the fierce Yama (god of death),
Like those many amusing humans, Did you think I would fall?"

"I ask you for a few boons - grant them to me today.
my previous bad deeds' effects should no longer continue but vanish. Henceforth, make me a new being and let all my sorrows disappear with a clear mind. Always make me live in happiness..."

இந்த பாரதி பாடலுக்கு வளக்க உரை எழுதும் போட்டி நடத்தப்பட்டது. இந்தப் போட்டியில் குறிஞ்சி உறுப்பினர்களின் பெற்றோருக்கும் பங்கேற்பு வழங்கப்பட்டது. பின்வரும் சிறந்த விளக்கங்கள் நமது பங்கேற்பாளர்களின் உருவாக்கம். குறிஞ்சி குழுவினர் பரிசு அட்டையை வழங்கி அவர்களுக்கு தங்கள் நன்றியைப் பகிர்ந்து கொண்டனர்.

# தேடிச் சோறு தினம் தின்று

மகாகவி பாரதியார், பராசக்தியிடம் யோகசித்தி பாடல் மூலம் சில வரங்கள் கேட்கின்றார்.' மானிட வாழ்க்கை ஒரு கனவு. மானிடர் கனவை உண்மை என்று நினைக்கின்றார்கள். அதனால், நாள்தோறும் உணவுதேடி உண்கிறார்கள். உறங்குகிறார்கள் ஏதேதோ.கதைகளைப் பேசிக் காலம் கழிக்கிறார்கள். மனம் வருந்துகிறார்கள்; துன்பத்தில் சிக்கி தவிக்கிறார்கள்; பிறர் கவலை அடையுமாறு பல தீங்குகளையும் செய்கிறார்கள்; பின்னர் ஒரு நாள் முதுமை அடைந்து கிழப்பருவம் எய்தி காலனுக்கு இரையாகி விடுகிறார்கள். இத்தகைய வேடிக்கை மனிதர்களைப் போல நானும் வீழ்ந்து மடிந்துவிடுவேன் என்று நினைத்தாயோ ? இல்லை. என்னை அவ்வாறு வீழ்த்தி விடாதே !

நான் முன்பு செய்த தீயசெயல்களுக்கான பலாபலன்கள் என்னைவந்து சேராதவாறு அவற்றை அழித்துவிட வேண்டும். என்னைப் புதிய மனிதனாக்கு எனது கவலைகளை எல்லாம் போக்கிவிடு எனது ஆன்ம அறிவை மேலும் தூய்மைப்படுத்தி, என்னை என்றும் மகிழ்ச்சியோடு இருக்கச் செய்வாயாக என்ற வரங்களைக் கேட்கிறார்.

**இங்ஙனம்**

**தேசிய நல்லாசிரியர், பைந்தமிழ்ப் பாவலர்**
**பேராசிரியர் சி. சக்திவேல்**



# பாரதி சொல்வது என்ன?

யோக சித்தி என்னும் கவிதைத் தலைப்பின் கீழ் வரம் கேட்டல் எனும் பாடல் வரிகள் இவை. நான் உனக்கு பண்ணும் பூசைகள் எல்லாம் வெறும் பாலை வனத்தில் இட்ட நீரோ? நீயே சரணம் என்று இருக்கிறேன்.எனக்கு நிதியும் அறனைக் காக்கும் திறனும் தருவாய் என்று பணிந்து உன்னை வேண்டி பல நாள் இங்கே வந்து வேண்டி விட்டேன். இன்னும் இதற்கு நீ செவி சாய்க்கவில்லை என்று கோபமுற்று, தேடி உணவு உண்டு , கதை பேசி ஒரு சாதாரண வாழ்க்கை வாழும் மனிதரைப் போல் என்று கூட சொல்லாமல் அப்படி வாழும் மனிதரை வேடிக்கை மனிதர் என்று சொல்கிறார் பாரதி.

எப்படி வாழ வேண்டும் என்று மட்டும் இல்லாமல் எப்படி மறைந்து விடக் கூடாது என்று சொல்வதாக உள்ளது பாரதியின் வரிகள்.
பராசக்தியிடம் வரம் கேட்கும் பாரதி , பல நாள் கேட்டு கிடைக்காமல் இன்றைக்கே வரம் வாங்கி விட வேண்டும் என்ற மன உறுதியுடன் பாடியுள்ளார். கடந்து போன நாட்களின் நினைவுகளில் காலத்தை வீணடிக்கக் கூடாது. புதியதாய்ப் பிறந்தோம் என்று ஒவ்வொரு நாளையும் நாம் புதியதாகத் தொடங்க வேண்டும் என்றும் கவலைகளை மறந்து, மனதைத் தெளிவாக வைத்துக் கொள்ளவும் சந்தோசமாக இருக்கவும் வேண்டும் என்று மனநலன் பற்றி சொல்வதாகவே எனக்குத் தோன்றுகிறது.

இந்த தலைப்பின் கீழ் அடுத்து வரும் வரிகளில் உடல் வலிமையைக் கேட்கிறார். சுவர் இருந்தால் தானே சித்திரம் வரைய முடியும்.எடுத்த காரியத்தில் எல்லாம் வெற்றியையும்,தொழில் பண்ண பெரு நிதியும் கேட்கும் பாரதி, அதை செய்ய பலபேரின் துணையையும் கடவுளிடமே கேட்கிறார். தான் பாடும் திறன், நாட்டு வளம்,நாடு புகழ் அடையும் அனைத்தையும் அருள்வாய் என பராசக்தியிடம் கேட்கிறார். ஆம்! ஆண்டாள் கண்ணனிடம் கொண்ட பக்தியைப் போல வீரர்கள் அனைவரும் பாரதத்தாயிடம் பக்தி கொள்ள வேண்டும் என சொன்னவர் அல்லவா?
பயம் ஒழியவும், சந்தேகம் தீரவும் எல்லா துயரமும் உடனே மறைய வேண்டும் என்றால் அது நம் சக்திக்கு அப்பாற்பட்ட சக்தி தேவை என்றே பாரதி எண்ணி இருக்கக்கூடும். அதனால் தான் அர்ச்சுனனுக்கு கண்ணனைப் போல் நீயே என்னை வழிநடத்த வேண்டும் என்று கடைசியில் சரணடைந்து விட்டார்.
பராசக்தி அவர் கேட்ட வரத்தை அருளினார் என்றே எனக்குத் தோன்றுகிறது. நரை கூடி கிழப்பருவம் எய்தா அந்த மகாகவி, தன் 39 வயதில் மறந்தாலும் இன்றும் நம் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

**இங்ஙனம்**
**திவ்யா சங்கரசுப்பிரமணியன்**

# 'தேடிச் சோறுநிதந் தின்று'-பாரதியார்

இந்தப் பாடல் பாரதியாரின் தோத்திரப் பாடல்களில் 'யோக சித்தி" என்ற தலைப்பில் வருகின்றது. கருத்தாழம் மிக்க இந்தப்பாடல் நம் சிந்தனையைத் தூண்டும் விதத்திலும் அமைந்துள்ளது. இப்பாடலில் இருந்து நான் அறிந்து கொண்ட கருத்தை, உங்களுடன் இங்கு பகிர்ந்து கொள்கிறேன். "உண்டேன், உறங்கினேன், மடிந்தேன் என்ற குறுகிய வட்டத்தை விடுத்து, தெளிவான சிந்தனையுடன், அனைவரிடமும் அன்பும் அறனும் பாராட்டி, சுற்றத்துடன் கூடி வாழ்ந்து, ஆக்கபூர்வமான வாழ்வை வாழ வேண்டும்" என்ற கருத்தை இப்பாடல் வலியுறுத்துகின்றது. இதன் மூலம் மக்கள் பயனுறும் வாழ்க்கை வாழ வேண்டும் என்ற பாரதியாரின் ஏக்கமும் சமுதாய அக்கறையும் இணைந்து வெளிப்படுகிறது.

மகாகவி பராசக்தியிடம் பாடுவதால் வெறும் பக்திப் பாடலாக மட்டுமே நினைத்து அலட்சியம் செய்யாமல், இதில் அவர் கூறும் உட்பொருளை சற்று விளக்கமாக நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

மகாகவி பாரதியார், உலக மாதாவான பராசக்தியிடம், "தற்காலிக இன்பத்தைத் தருகின்ற பொருட்களைத் தினமும் தேடி அலைந்து, தன்னலம் மிகுந்த குறுகிய வட்டத்திற்குள் வாழ்ந்து, வீண் கதைகளும், புறமும் பேசி, எதிலும் திருப்தியடையாமல் மனம் கவலை கொண்டு, தம்மைச் சுற்றி உள்ள மனிதர்கள் வருந்தத்தக்கச் செயல்கள் செய்து, வாழும் நாட்களை வீணாக்கி, மூப்பை அடைந்து, தலைமுடி நரைத்தும் அறிவால் பக்குவப்படாமல், மரணத்தை எய்துகிறர்கள் பலர். இப்படி வீண் வாழ்க்கை வாழும் வேடிக்கை மனிதர்களைப் போல் நானும் பயனற்று வீழ்ந்து மடிவேன் என்று நினைத்தாயோ?" என்று கேட்கிறார்.

பின், பாரதியார், பராசக்தியிடம், 'உன்னிடம் நான் சில வரங்கள் கேட்கிறேன். அதனை இன்றே எனக்குத் தருவாய்* என்கிறார், மேலும் அவர், 'நான் முன்பு செய்த தவறுகள் என்னைத் தொடராமல் அழிந்திடவேண்டும். என்னைப் புத்தம் புது உயிராக்கி, என் சிந்தனையைத் தெளிவாக்கி, கவலைகள் ஏதும் இன்றி என்றும் மகிழ்ச்சியுடன் இருக்கச்செய்வாய்" என்றும் வேண்டுகிறார். என்ன ஒரு தெளிவு!! பாரதி! பாரதி!ர் என்றும் நீ எனக்கு ஒரு ஆச்சர்யம் தான். எனக்கு மட்டுமா, இந்த உலகத்திற்கே!

இந்தப் பாடலில் என் முண்டாசுக் கவிஞன், கூட்டம் கூடி வீண் கதைகளைப் பேசுவதைத் தான், சின்னஞ்சிறு கதைகள் பேசி" என்கிறான் ஆனால் இன்றைய அறிவியல் உலகத்தில் கணினியும், திறன்பேசியும்(smart phone) உலகத்தை இணைத்து நம் கைகளில் தருகிறது. சமூக வலைதளங்களான புலனம், முகநூல், படவரி, கீச்சகம்,

வலையொளி (WhatsApp, Facebook, Instagram, Twitter, YouTube) போன்றவை தான் நம் உறவினர்களும், நண்பர்களும். இவற்றால் நன்மைகள் உண்டு என்றாலும், அவைகளோடு வீணாகக் கழிக்கும் நேரம் தான் அதிகம். நான் இதனை "சின்னஞ்சிறு கதைகள் பேசி" என்ற தொடருக்குக்குத் தற்காலத்திற்கு ஏற்ற பொருளாகக் கொள்கின்றேன்.

"நான் வீழ்வே னென்றுநினைத் தாயோ?" அப்பப்பா! என்ன வீரம், என்ன உரிமை, என்ன கோபம். உலக மாதாவிடமே இப்படி ஒரு கேள்வியை முன் வைக்க என் பாரதியை அன்றி வேறு யாரால் இயலும்?

மகாகவியின் காலம் நூறாண்டுகளுக்கு முன்னதாக இருந்தாலும், இந்தக் கருத்துகள் எக்காலத்திற்கும் ஏற்றவை என்பதை நாம் காண்கிறோம். இதனை மனதில் நிறுத்தி நாம், நம் சிந்தனையைத் தெளிவுபடுத்தி ஆக்கப்பூர்வமான செயல்களைச் செய்வதற்கு முயல்வோம்.

நான் வீழ்வே னென்றுநினைத் தாயோ?"

**இங்ஙனம்**
**திருமதி. வனதுர்கா வெங்கட்**





மேற்கண்ட பாரதியின் பாடலுக்கான சிறு விளக்கம். பாரதி பராசக்தி யின் முன்பு நிற்கிறார். தேவி அழகாக அன்புடன் காட்சியளிக்கிறாள்.தேவி எனக்கு வரம் வேண்டும். என்ன வரம் வேண்டும் என்கிறாள் தாய். தாயே இந்த உலகத்தில் பிறந்து வளர்ந்து உண்டு உறங்கி யாருக்கும். பயன்படாத செயல்கள செய்து இறுதியாக கூற்றுவனுடன் செல்ல எனக்கு விருப்பமில்லை.

அதற்காக நான் என்ன செய்ய வேண்டும் என்கிறாள் பராசக்தி. தாயே நான் அறியாமையினால் செய்த தீமைகள் என் மனத்தில் படிந்த மாசு ஆ கியவற்றை அரவே அழித்து என்னை புதிய மனிதனாக உருவாக்க வேண்டுமென கேட்கிறேன் தாயே. நான் நீ கொடுக்கும் இந்த வரத்தின் வலிமையால் புதிய மனிதனாக மகிழ்ச்சியாக வல்லமையுடன் இந்திய மக்களுக்கு. உழைப்பேன் அவர்களை அடிமைத்தளையில் இருந்து விடுபட வைப்பேன். சுதந்திர தாகத்தை தணிப்பேன்.

பாரதியின் பக்தியை கண்டு மகிழ்ந்த பராசக்தி அவர் கேட்ட வரத்தை அருளினாள். பாரதி தான் பெற்ற வரத்தின் வலிமையால் பல அருமையான பாடல்களை எழுதினார்.

மக்கள் மனத்தில் விழிப்பு ணர்ச்சியை ஏற்படுத்தினார். தோன்றில் புகழோடு தோன்றுக என்ற வள்ளுவரின் வாக்கிற்கு தக்கபடி புகழுடன் தோன்றி புகழுடன் வாழ்ந்து புகழுடன் இயற்கை எய்தினார் மகாகவி பாரதி. அவர் இறந்துபல வருட ங்க ள் ஆனாலும் இன்றளவும் மக்கள் மனத்தில் வாழ்கிறார்.

ஆகவே நாம் இந்த உலக வாழ்க்கையை துறந்த பின்பும் வாழ வேண்டுமானால் பிறரை மதிக்க வேண்டும். மலையளவு நல்ல செயல்களை செய்ய முடியாவிட்டாலும் கடுகளவு செய்யயலாமே. வாழ்க பாரதியின் நாம ம் வளர்க அவர் புகழ். அமுதே தமிழே நீ வாழ்க உன் புகழ் வாழ்க.

வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி. வளர்க உங்களுடைய (குறிஞ்சி) தமிழ் தொண்டு! மனமார்ந்த நன்றி.

**இங்ஙனம்**


**திருமதி. அனுராதா சுந்தரராஜன்**

## குறிஞ்சியின், கோலாகலப் பொங்கல் கொண்டாட்ட விழாவில் கோலப்போட்டி இல்லாமலா?
## கோலப்போட்டியில் கலந்து பரிசு பெற்ற போட்டியாளர்கள்:


1. செல்வி. ஹம்சினி
2. செல்வி. அவந்திகா செல்லுக்கா தினேஷ்
3. திருமதி. நந்தினி மாணிக்கவேல்
4. திருமதி. அம்பிகா அருண் பிரசாத்
5. திருமதி. ப்ரீத்தி வே. ராமன்




**செல்வி. ஹம்சினி**




**செல்வி. அவந்திகா செல்லுக்கா தினேஷ்**




**திருமதி. நந்தினி மாணிக்கவேல்**




**திருமதி. ப்ரீத்தி வே. ராமன்**

## பழமொழி

### பழமொழி/Pazhamozhi

குந்தித் தின்றால் குன்றும் மாளும்.

### பொருள்/Tamil Meaning

குன்றளவு சொத்து உள்ளவனும் வேலையில்லாமல் வெறுமனே உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தால் அவன் சொத்து விரைவில் கரைந்துவிடும்.

**Kurinji Team sincerely appreciate and thank Increate Studios for their support during our 2025 Pongal event.**

**We encourage our community members to support our budding women entrepreneurs!**

# INCREATE STUDIOS

*EVENT PLANNING, DECOR AND DESIGNS*

At Increate Studios, we craft unforgettable experiences by blending tradition with modern aesthetics. Rooted in culture yet designed for today, our bespoke event decor transforms spaces into stories. With creativity at our core, we curate magic tailored just for you.




**Contact us**

9495298797

increate studios

increate_events

increatestudios@gmail.com